Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

06.11.2020 | வெள்ளிக்கிழமை | தொடர்புக்கு 076 584 2222

## 14 நாள்களில் 16 பேர் சாவு!

கொழும்பு, நவ.6
நாட்டில் கடந்த 23ஆம் திகதி முதல் நேற்றுவரையான 14 நாள்களுக்கு 6 ஆயிரத்து 283 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 2

## வார இறுதி நாள்களில் அதிக பொலிஸ் தடை!

கொழும்பு, நவ.6
வார இறுதி நாள்களில் அதிகளவான பொலிஸ் வீதித் தடைகள் ஏற்படுத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
வார இறுதியில் பயணங்களை மக்கள் கட்டுப்படுத் 2

## புதினம் தெரியுமோ?

இண்டைக்கு யாழ்ப்பாணம் கச்சேரில ஜே ஜே எண்டு ஒரு கூட்டம் நடந்திச்சுப் பாத்தியளோ. ஏதோ கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் குழுக் கூட்டமாம். அதுசரி அது என்னவாவோ இருந்திட்டுப் போகட்டும், ஆனா அந்த கூட்டப் படங்களைப் பாத்திட்டு, இங்க நாங்க செத்த வீட்டுக்கு அச்சு பேர் ஒண்டா நிண்டாலே 2

## சிறுமியுடன் தவறாக நடந்த ஆசிரியர் கைது

முல்லைத்தீவு, நவ.6
சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் என்ற குற்றசாட்டில் வெலிஓயாவில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை தனியார் வகுப்புக்குச் சென்ற 11 2

# சுகாதார அதிகாரிகள் தடுத்தும் மீறி நடந்தது கச்சேரிக் கூட்டம்!

**யாழில் இன்று சர்ச்சை**

யாழ்ப்பாணம், நவ.6
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று நடத்தப்பட்ட கிராமிய பொருளாதார மேம்பாட்டுக் கூட்டம் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலை மீறியே நடத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 2

## குடும்பமாக நஞ்சருந்தியதில் 16 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

*திருமலையில் இன்று சோகம்*

திருகோணமலை, நவ.6
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நஞ்சருந்தியுள்ள நிலையில், 16 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார். ஏனைய நால்வரும் 2

## வெலிக்கடை சிறையில் பி.சி.ஆர்.

கொழும்பு, நவ.6
வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் மற்றும் ஊழியர்கள் 196 பேருக்கு நேற்றுப் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. 2

## அல்வாய் தொற்றாளர்களுடன் தொடர்புபேணியோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 6
கரவெட்டி அல்வாயைச் சேர்ந்த ஒரே குடும்பத்திலுள்ள மூவருக்கு கொரோனா நேற்றுமுன்தினம் இரவு உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கரவெட்டி மற்றும் அண்மைய பிரதேசங்களில் பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்வேறு நபர்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர். 8

## சிறைகளில் இணைய தொடர்பாடல்

கொழும்பு, நவ.6
சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுடன் இணையம் மூலமான தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுக்கும் 2

## 'சீன எதிர்ப்பு' பொறிக்குள் இலங்கையை மாட்டச் சதி

*விழிப்பாக இருக்குமாறு அரசுக்கு தேசியவாத அமைப்புகள் எச்சரிக்கை*

கொழும்பு, நவ.6
சீனாவுக்கு எதிராக இலங்கையை திசைதிருப்பும் கூட்டு முயற்சியில் அமெரிக்காவும், இந்தியாவும் ஈடுபட்டுள்ளன. ஜோ பைடன் ஆட்சிக் காலத்திலும் இது தொடரும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு சிங்கள தேசியவாத அமைப்பு களின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்' எச்சரித்துள்ளது. 2



## விஜியேந்திரன் கொலை நீதிகோரி ஆர்ப்பாட்டம்

மன்னார், நவ.6
மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இலுப்பை கடவை கிராம அலுவலரான எஸ்.விஜியேந்திரன் (வயது 55) கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கோரியும் இன்று காலை கவனவீர்ப்புப் 2

## 20 நிமிடங்களில் முடிவு

**புதிய கருவி இறக்குமதி**

கொழும்பு, நவ.6
கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை 20 நிமிடங்களில் கண்டறியக் கூடிய கருவிகள் கொண்டு வரப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்மூலம் விரைவாகத் தொற் 8

## சண்டித்தனம் செய்தவர் குடும்பத்தோடு தனிமை!

பருத்தித்துறை, நவ.7
தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரை தாக்க முயன்ற ஒருவர் குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவர் மீது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்காக சட்டநடவடிக்கைளும் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் நடந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றாளருடன் தொடர்பில் இருந்தனர் என்று 8

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# சுகாதார அதிகாரிகள்...

இந்தக் கூட்டத்தில் தென்னிலங்கையிலிருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலர்கள், அவர்களது பணியாளர் தொகுதியினர், பாதுகாப்புத் தரப்பினர் என்று சுமார் 100 பேர் வரையில் பங்கேற்றனர். இவர்களுடன் வடக்கிலுள்ள அதிகாரிகளும் என்று சுமார் 160 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தற்போது கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், ஒரு மாவட்டத்தில் இருந்து பிறமாவட்டங்களுக்குச் செல்வோர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

கொரோனா தடுப்புக்காக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை மீறி தென்னிலங்கை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலரையும் அழைத்து வடக்கு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. அரசு அறிவித்த ஒரு மீற்றர் சமூக இடைவெளி கூட்டத்தில் பேணப்படவில்லை. அதேநேரம், மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் சமூக இடைவெளியைப் பேணாமல் மிக நெருக்கமாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலர் அமர்ந்திருந்தமை தொடர்பான ஒளிப்படங்களும் வெளியாகியிருந்தன. சாதாரண பொதுமக்களிடம் இறுக்கமான சுகாதாரக் கட்டுப்பாடுகளை விதித்து தடைமுறைப்படுத்தும் சுகாதாரப் பிரிவு இந்தக் கூட்டத்தையும், அதற்காக வந்தவர்களையும் கண்டும்காணாது விட்டிருந்தது என்று பல தரப்புக்களில் இருந்து விமர்சனம் கிளம்பியிருந்தது.

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் சட்ட நடைமுறைகளுக்கு அமைய இந்தக் கூட்டத்தை நடத்த முடியாது என்று சுகாதார திணைக்கள அதிகாரிகள் அறிவுறுத்திய போதும், அதை மீறியே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. அதேவேளை, இந்தக் கூட்டத்தில் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

எமக்கு வழங்கப்பட்ட வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்தக் கூட்டதை நடத்த முடியாது என்பது உண்மை என்று தெரிவித்துள்ள சுகாதாரப் பிரிவினர், அது தொடர்பாக அறிவித்த பின்னரும் கூட்டம் நடந்தப்பட்டுள்ளது, எமக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்தனர் என்று தெரிவித்துள்ளனர். (எ-22)

## புதினம் தெரியுமோ

வந்து கட்டையைப் போடுற ஆக்களுக்கு இந்தக் கூட்டம் ஒண்டும் தெரியாது சனம் இங்கால புறுபுறுக்குது கண்டியளே. இப்ப கொரொனா பேயாட்டம் ஆடிக் கொண்டிருக்கேக்க சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினா தப்பினியள், இல்லாட்டி விசயம் முடிஞ்சிடும் பிறகு எங்களைப் பிழை சொல்லக் கூடாது என்று அரசாங்கம் சொல்லிப்போட்டு. ஒருபக்கத்தால டாக்குத்தர்மார், சனம் ஒண்டுகூடக் கூடாது சுகாதார நடைமுறையைப் பின்பற்றோம் என்று தலை தலையா அடிச்சுக் கொண்டிருக்கினம். இந்த நேரத்தில அரச அதிகாரியளும், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களு மெல்லோ முன்மாதிரியா நடந்து காட்டோனும். அதை விட்டுட்டு நீங் களும் கொழும்பில இருந்து படை பட்டாளத் தோட வந்து கூட்டம் கூடுறது சரியே தம்பியவை. சனம் கோபப்படுறதிலும் ஒரு நியாயம் இருக்குதுதான். அரசியல் செய்யி றது பிழையில்லை கண்டியளோ, அதுக்கும் ஒரு சமய சந்தர்ப்பம் இருக்கவெல்லோ வேணும்.

-பட்சி

# 14 நாள்களில்...

இந்தக் காலப் பகுதிக்குள் 16 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான தொற்றாளர்கள் (866 பேர்) கடந்த 23 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டனர். ஒரே நாளில் அதிகளவானவர்கள் (765 பேர்) நேற்றுக் குணமடைந்தனர். அதேவேளை, இலங்கையில் 3ஆவது அலைமூலம் நேற்று வரை 9 ஆயிரத்து 96 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் நேற்று மட்டும் 11 ஆயிரத்து 316 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. நாட்டில் இதுவரை 5 லட்சத்து 68 ஆயிரத்து 774 பிசிஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. (எ-44)

# வார இறுதி...

திக்கொள்ள வேண்டும். வார இறுதியில் கூட்டங்கள், விளையாட்டு நிகழ்வுகள் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் ஊரடங்கு இல்லாத பகுதிகளுக்கும் இது பொருந்தும். பொது மக்கள் தமது நேரத்தை வீடுகளிலேயே கழிக்க வேண்டும். கொவிட் தொற்றை தடுப்பதற்கான வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். என்றார். (எ-இ)

# வெலிக்கடை...

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்றுக் கொரோனாத் தொற்றாளர்கள் 7 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து அங்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் இது வரை 6 ஆயிரத்து 300 க்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து சிறைச்சாலைகளி லும் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் அதேநேரம், கைதிகளை பொது மக்கள் பார்வையிடும் செயற்பாடும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# 'சீன எதிர்ப்பு' பொறிக்குள்....

அந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது

அமெரிக்காவில் ஆட்சிகள் மாறினாலும் இலங்கைமீதான அழுத்தங்கள் குறையப்போவதில்லை. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எப்படியான மாற்றங்கள் நடந்தாலும் அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை என்பது முழுமையாக மாற்றமடையாது. முக்கியமாக தெற்காசிய நாடுகள் மீதான அமெரிக்காவின் கழுகுப் பார்வை தொடரும். சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்ப டும். சீனாவுடனான உறவுகளை மட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிக்கும். தற்போது அமெரிக்காவுடன் இந்தியாவும் இணைந்துள்ளது. அந்த நாட்டுக்கு பல உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது. இரு நாடுகளும் சீன எதிர்ப்புப் போக்கைக் கடைபிடிப்பவை. எனவே, இலங்கை மீது கூட்டு அழுத்தம் பிரயோகிக்கப்படலாம்.

இது தொடர்பில் எமது அரசாங்கம் விழிப்பாகச் செயற்படவேண்டும். இராஜதந்திர மட்டத்திலான கொடுக்கல் வாங்கல்களின்போது விழிப்பாக இருக்கவேண்டும். சீனாவுடனான உறவை பலப்படுத்தவேண்டும்.

அதேவேளை, இலங்கை அமெரிக்கா பக்கம் சாய்வதாலேயே அன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா திணித்தது.

ஆனால் இன்று இந்தியாவே அமெரிக்கா பக்கம் சாய்ந்துள்ளது. இதனால் 13 தொடர்பில் இந்தி யாவால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை அரசாங்கம் கண்டுகொள்ளதேவையில்லை. என்றார். (எ-44)

# சிறுமியுடன் தவறாக...

வய துச் சிறுமியின் கையைப் பிடித்து தவறாக நடக்க முயற்சித்தார் என்று ஆசிரியர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் வெலிஓயா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் 37 வயதுடையவர் என்றும், அவர் ஹெப்பிட்டிக்கொலவ நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புபட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-19)

# சிறைகளில்...

நடவடிக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இறங்கியுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நிர்வாகக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், கைதிகள் தமது உறவுகளுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடுவதற்கு இது உதவும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் 23 சிறைச்சாலைகளில் உள்ள 33 ஆயிரம் பேர் நன்மை பெறுவார்கள் என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கம் குறிப்பிட்டுள்ளது.(எஇ)

# குடும்பமாக...

திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் இன்று காலை திருகோணமலை, ஆனந்தபுரிக் கிராமத்தில் நடந்துள்ளது.

என். விதுரசிகா (வயது16) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். தாயாரான என். நாகேஸ்வரி (வயது31) மற்றும் பிள்ளைகளான என். வைஷ்ணவி (வயது12) என்.ஐஸ்வர்யா (வயது8) மற்றும் என். கஜவீர் (வயது2) ஆகியோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விதுசிகாவும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர்கள் நஞ்சு அருந்தியமைக்கான காரணம் தெரியவில்லை என்று தெரிவித்த பொலிஸார், இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நஞ்சருந்திய பெண்ணின் கணவர் ஒரு பூசாரி என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனக் குறிப்பிட்ட பொலிஸார் விசாரணைகளின் பின்னரே மேலதிக விவரங்கள் தெரியவரும் என்று தெரிவித்தனர். (எஇ)

# விஜியேந்திரன் கொலை...

போராட்டம் நடத்தப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச செயலக பணியாளர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பிரதேச செயலகத்துக்கு முன்பாகக் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், உதவி பிரதேசச் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாந்தை மேற்கில் கடமையாற்றும் கிராம அலுவலகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். "அரச சேவைக்கு சன்மானம் ஆறடி கிடங்கா?, கொலையாளி யார்? விசாரணையைத் துரிதப்படுத்துங்கள், அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள், கிராம அலுவலகர் விஜியேந்திரனின் கொலைக்கு நீதி வேண்டும்" என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய இலுப்பைக் கடவைக் கிராம அலுவலரான எஸ்.விஜியேந்திரன் (வயது55) கடந்த 3ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது கடமை முடிந்து இரவு 8 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் வைத்து விஜியேந்திரன் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.(எ-56)

# தனிமைப்படுத்தலை முடித்தவர் வீதியில் விழுந்தது திடீர் சாவு

புத்தளம், நவ.6

புத்தளம் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர், திடீரென வீதியோரத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

14 நாள்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து, வீட்டுக்குத் திரும்பிய 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த நபரின் இரத்த மாதிரிகள், பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ந-இ)

# கொரோனாச் சாவுகள் உயர்வு; மக்களே மிகவும் அவதானம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, நவ.6

இலங்கையில் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் கொரோனாத் தொற்றால் 11 மரணங்கள் பதிவாகியுள்ளமை மிகவும் ஆபத்தான நிலைமை என்றும் இதனால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



நாட்டில் முதல் இரண்டு கொரோனாத் தொற்றுகளின் போதும் 9 மாதங்களில் 13 மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன. மூன்றாம் அலையின் போது கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 11 மரணங்கள் பதிவாகியுள்ளன என மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். இவர்களில் சிலர் உயிரிழந்த பின்னரே கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருந்தனரென இனங்காணப்பட்டிருந்தது. கொரோனாவால் அதிகளவு உயிரிழப்பு வீதம் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், இதனால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

# உயர்தரப் பரீட்சை இன்றுடன் நிறைவு

கொழும்பு, நவ.6

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 648 பரீட்சை மத்திய நிலையங்களில் உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமானது. இம்முறை பரீட்சைகளுக்காக 3 லட்சத்து 62 ஆயிரத்து 824 பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இம்முறை ஐ.டி.எச் வைத்தியசாலை மற்றும் தனிமைப்படுத்தல் முகாம்களிலும் பரீட்சைகள் இடம்பெற்றன என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# அதிக விலைக்கு அரிசி விற்பவர்கள் கைதாவர்

கொழும்பு, நவ.6

அரிசி வகைகளில் அதிகபட்ச விலைகளை மீறி விற்பனை செய்வோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரிசி வகைகளுக்கான அதிகபட்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டு, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை மீறி அரிசி வகைகள் விற்பனை செய்யப்பட்டால் நுகர்வோர் விவகார ஆணையகத்தின் அதிகாரிகள் ஊடாக அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கொரோனாச் சிகிச்சைக்கு இன்னும் இரு நிலையங்கள்

களுத்துறை, நவ.6

களுத்துறை மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, இரண்டு மத்திய நிலையங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, அளுத்கம தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் களுத்துறையிலுள்ள கல்வியியல் பீடம் என்பவற்றையே கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் நிலையமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (ந-இ)

# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, நவ.6

நாட்டின் பல பகுதிகளில் பிற்கல் 2 மணிக்குப் பின் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைதீவு மாவட்டத்தில் கடற்பகுதிகளில் காலை வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, வட மத்திய, ஊவா, வடமேல், சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணத்தின் சில பகுதிகளில் பனி மூட்டமான கால நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். (ந-இ)



# தனிமையை முடித்த 43 பேர் வீடுகளுக்கு

கொழும்பு, நவ.6

தனியார் விடுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 43 பேர் இன்று தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதுவரை தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வீடு திரும்பியவர்களின் மொத்த எண்ணிக்கை 63 ஆயிரத்து 644 ஆக அதிகரித்துள்ளது. (ந-இ)

# மத்திய தபால் நிலைய சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, நவ.6

கொவிட் 19 தொற்றின் காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிமாறல் கடமைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 10 டி.ஆர் விஜயரத்ன மாவத்தையில் அமைந்துள்ள மத்திய தபால் பரிமாறல் சேவையில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் கொவிட் 19 தொற்றுக்குள்ளானவராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். இதையடுத்து அதன் அனைத்து நடவடிக்கைகளும், பொதுமக்கள் அலுவல்களும் மீண்டும் அறிவிக்கும் வரையில்



தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய இங்கு கிருமித் தொற்று நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் கடமைகள் ஆரம்பிக்கப்படும் தினம் தொடர்பாக அறிவிக்கப்படும் என்று தபால்மா அதிபர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



# படையெடுக்கின்றது கொரோனா!

### துறைமுக ஊழியர்களுக்கு.....

கொழும்பு, நவ.6

மேலும் 11 துறைமுக ஊழியர்களுக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் துறைமுக ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு அமைய குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ந -இ)

### நகரசபை ஊழியர்களுக்கு

கொலன்னாவை நகரசபை ஊழியர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி கொலன்னாவை நகர சபை அதிகார பிரிவில் இதுவரை 86 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ந-இ)

### கல்பிட்டி வைத்தியசாலை ஊழியருக்கு..!

கல்பிட்டி ஆதார வைத்தியசாலையின் ஊழியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன் காரணமாக குறித்த வைத்தியசாலையில் தாதி உள்ளிட்ட இருவர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். (ந-இ)

### மட்டக்களப்பில்...!

மட்டக்களப்பு, நவ.6

மட்டக்களப்பு செங்கலடியில் ஒருவருக்கும், வாழைச்சேனையில் ஒருவருக்கும், ஏறாவூரில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இன்று மதியம் உறுதி செய்யப்பட்டுள்ளது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரை 47 பேர் கொரோனாவால் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ந-இ)



### சிறுவர் மருத்துவமனையில்

கொழும்பு, நவ.6

கொழும்பு, லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் இது வரை 32 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 20 பேர் சிறுவர்கள் எனவும் 12 பேர் கர்ப்பிணிகள் எனவும் மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார். ஆயினும் மருத்துவமனையில் வழமைபோன்று மருத்துவ சேவைகள் எந்த வித இடையூறும் இல்லாமல் நடந்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். ( ந-இ)

### அரச அச்சக ஊழியர்களுக்கு...!

கொழும்பு, நவ.6

பொரளையில் உள்ள அரச அச்சக நிறுவனத்தின் இரண்டு ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரண்டு நோயாளிகளும் அவர்களுடன் பழகிய 6 ஊழியர்களும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று அரச பத்திரிகை நிறுவன செயலாளர் கங்கனி கல்பனா லியானகே தெரிவித்தார்.

கடந்த 3 ஆம் திகதி நிறுவனத்தின் 70 ஊழியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொரோனா சோதனைகள் மூலம் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திணைக்களத்தின் அச்சிடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, அத்தியாவசிய அச்சிடும் பணிகள் நாரஹேன்பிட்டிய கிளையில் மேற்கொள்ளப்படுகின்றன.

### பொலிஸாருக்கு...!

கொழும்பு, நவ.6

மேல் மாகாணத்தில் புதிதாக 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 358 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளதுடன், சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 350 ஆக பதிவாகியுள்ளது. (ந -இ)

### பொம்மை தொழிற்சாலையில்

கொழும்பு, நவ.6

வத்தளை ஹெந்தல கெரவலப்பிட்டியவில் உள்ள பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த மேலும் 68 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தத் தொழிற்சாலையில் 51 பேருக்கு கொரோனா தொற்றியிருந்த, நிலையிலேயே இப்போது மேலும் 68 பேருக்கு தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

தொழிற்சாலையில் 693 ஊழியர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகளின்படி, இதுவரை தொழிற்சாலையில் இருந்து மொத்தம் 119 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். சுமார் 400 பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகள் இன்னும் பெறப்படவில்லை. அவை வெளியிடப்பட்டால், இன்னும் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் வத்தளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

### கல்முனையில்...

அம்பாறை, நவ.6

கல்முனை - இறக்காமம் பிரதேசத்தில் மேலும் இரு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு புத்தகக் கடை ஒன்றில் பணிபுரிந்து மீண்டும் தனது இல்லத்துக்குத் திரும்பியிருந்த நிலையில், அடையாளப்படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளரின் தந்தைக்கும் சகோதரருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் முடிவுகளின்படி இவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ( ந-இ)

## சாவ. பிரதேச அதிகார எல்லையில் வலி.கிழக்கின் வரவேற்பு வளைவு

### இரு தவிசாளர்களின் நேரடி கண்காணிப்பால் தவிர்ப்பு

சாவகச்சேரி,நவ.6

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினர், சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குள் வரவேற்பு அலங்கார வளைவை அமைக்க எடுத்த முயற்சி தடுக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கிழக்குப் பகுதி எல்லை சாவகச்சேரி பிரதேச சபையின் மட்டுவில் வண்ணாத்திப்பாலத்தின் அரைவாசிக்கு அப்பால் உள்ள நிலையில் பாலத்துக்கு வெளியே வரவேற்பு வளைவுகள் அமைக்க வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினர் முயற்சிகளை முன்னெடுத்தனர். அதற்கான வேலைத் திட்டங்களும் தயாராகின.

இதனை அவதானித்த பொதுமக்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். பொது மக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து அங்கு சென்று பார்வையிட்ட சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டார். அவரும் அங்கு வந்து பார்வையிட்டார்.

பிரதேச சபைகளின் எல்லைகளில் உள்ள சிக்கல் நிலையிலேயே இடம்மாறி வேலைகள் முன்னெடுக்கப்பட்டன என்று வலிகாமம் கிழக்கு தவிசாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் இரு தவிசாளர்களும் கலந்துரையாடியதால், சாவகச்சேரி பிரதேச எல்லைக்குள் வலி.கிழக்கு பிரதேச வரவேற்பு வளைவை அமைக்கும் முயற்சி தவிர்க்கப்பட்டது.(ஐ-9)

## 34 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

கொழும்பு, நவ. 6

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கை பிரஜைகள் 34 பேர் நாட்டை வந்தடைந்தனர்.

கட்டார், ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இவர்கள் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தொற்றை தடுக்கும் தேசிய செயலணி தெரிவித்துள்ளது. நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## தொற்றாளர்களோடு

# தொடர்புறாமல் இருக்க புதிய நடைமுறை அமுல்

கொழும்பு, நவ.6

ஏனைய சாதாரண நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா அச்சம் காரணமாக மருத்துவமனைகளுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளகூடாது என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைமை அதிகாரி மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சாதாரண நோயாளிகள்



கொரோனா நோயாளிகளுடன் தொடர்புகொள்வதைத் தடுப்பதற்கான டிரையேஜ் என்ற நடைமுறையை மருத்துவ பணியாளர்கள் பின்பற்றி வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையின் மூலம் வெளிநோயாளர்கள் பிரிவிலேயே கொரோனா நோயாளர்களையும், நோய் அறிகுறிகள் உள்ளவர்களையும் அடையாளம் காணமுடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

## உயிரை விடத் தேவையில்லை பதவியை விட்டாலே பேருதவி!

### சுகாதார அமைச்சரை கிண்டலடிக்கும் மங்கள

கொழும்பு, நவ.6

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சுகாதார அமைச்சரால் கையாள முடியாவிட்டால், அவர் பதவி விலகவேண்டும். மாறாக தனது உயிரைத் தியாகமாக வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறத்தேவையில்லை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மத நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடு பல்வேறு தரப்பினராலும் வெகுவாக விமர்சிக்கப்பட்டது.

இது குறித்து அவர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். இதன்போது தனது உயிரைத் தியாகம் செய்வதனூடாக கொரோனா வைரஸை இல்லாதொழிக்க முடியுமென்றால், அதற்கும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மங்கள சமரவீர தனது ருவிட்டர் பதிவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ற-இ)

## கொரோனாவிலிருந்து விடுபட வவுனியாவில் பிரார்த்தனை

வவுனியா, நவ.6

கொரோனாத் தாக்கத்தில் இருந்து விடுபட அருளாசி வேண்டி வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இன்று காலை இடம்பெற்றது.

இவ் வழிபாட்டில் மாவட்ட அரச அதிபர், அரச அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந -18)





## கொரோனாச் சிகிச்சைக்கு 50 வென்டிலேட்டர்கள்

கொழும்பு, நவ.6

இலங்கையில் கொரோனாச் சிகிச்சை சேவையைப் பலப்படுத்த 80 மில்லியன் ரூபா பெறுமதியான 50 வென்டிலேட்டர்கள் நேற்று சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் டிம்செக் நிதியம்,இந்த அன்பளிப்பை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.


சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் இலங்கையின் தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் இந்த வென்டிலேட்டர்களைக் கையளித்துள்ளார்.(ற-இ)

## தளரத் தொடங்கும் தனிமைப்படுத்தல்!

கொழும்பு, நவ.6

கொரோனாப் பரவலைத் தடுக்கும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த புளத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் கலிகமுவ பிரதேச சபை பகுதிகளிலும் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ந- இ)




## ஒரு மீற்றரைத் தாண்டியும் பயணிக்கும் கொரோனா

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் எச்சரிப்பு

கொழும்பு, நவ.6

கொரோனா வைரஸ் ஒரு மீற்றருக்கு மேல் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதைவிடக் கூடிய இடைவெளியைப் பேண வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

"பி.சி.ஆர். பரிசோதனையை விட செலவு குறைந்த முறையில் துரிதமாக முன்னெடுக்கப்படும் பரிசோதனைக்கு இலங்கை மாற வேண்டும். அத்தோடு மீண்டும் மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்"என்றும் அவர் கூறினார். (ற-இ)

# சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியைத் தழுவியுள்ளது

### ஐ.ம.சக்தியின் எம்.பி முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, நவ.6

இலங்கையில் கொரோனா அபாயத்தால் சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியையே எதிர்நோக்கி வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், சுயதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தான் வரும்போது வீதியோரங்களில் காணப்படும் விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன என ஊடகங்களின் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

ஊரடங்கு காரணமாகவே அவை மூடப்பட்டுள்ளன என்பதை அவர் மறந்து விட்டார் போல, கொழும்புக்குள் நாளாந்தம் ஊதியம் பெற்று வாழ்பவர்களே அதிகளவில் இருக்கின்றனர்.

எனவே ஊரடங்குச் சட்டம் காரணமாக இவர்களது அனைத்து தொழில் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஜனாதிபதி இவர்கள் தொடர்பில் ஊடகங்களின் முன்னிலையில் கருத்துரைப்பதை விடுத்து, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும். சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியை எதிர்நோக்கி வருகின்றது - என்றார். (ற-இ)

# எச்சரிக்கை நிலை முறைமையில் பொது நடவடிக்கை வழிகாட்டல்!

கொழும்பு, நவ.6

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு, எச்சரிக்கை நிலை முறைமையின் அடிப்படையில் பொது நடவடிக்கைகள் தொடர்பான புதிய வழிகாட்டல்களை அரசு வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமை அவ்வப்போது மாற்றத்துக்கு உள்ளாகும் நிலைமையில், நிகழ்வுகளில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையும் மாற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டல்களில் 4 எச்சரிக்கை நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

முதலாவது எச்சரிக்கை நிலைமை, அறிக்கையிடப்பட்ட கொரோனாத் தொற்று நாட்டுக்கு வெளியில் இருந்து வருபவர்களில் மட்டுமே (தனிமைப்படுத்தலில்) கண்டறியப்பட்டது.

இரண்டாவது எச்சரிக்கை நிலைமை, ஒரு கொரோனாக் கொத்து இனங்காணப்படுகின்றமை.

மூன்றாவது எச்சரிக்கை நிலைமை, வெவ்வேறு மாவட்டங்களில் பல கொத்துகள் கண்டறியப்படுகின்றமை.

நான்காவது எச்சரிக்கை நிலைமை, எந்தவொரு கொத்துக்களும் எந்த தொடர்பும் இல்லாமல் கொரோனாத் தொற்று தோன்றும் சமூக பரிமாற்றம்.

புதிய வழிகாட்டுதல்களின்படி, எச்சரிக்கை நிலை 3 மற்றும் 4க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி வகுப்புகள் உள்ளிட்ட உயர்கல்வி மையங்கள் மூடப்பட்டிருக்கும். அதே நேரத்தில் எச்சரிக்கை நிலை 3 இன் கீழ் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் ஆகியவை 50 வீதம் மட்டுமே இயங்க முடியும். திருமணங்களை நடத்தும்போது, எச்சரிக்கை நிலை ஒன்றின் கீழ் உள்ள பகுதிகளில் திருமணங்களை சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் நடத்தலாம். எச்சரிக்கை நிலை 2இன் கீழ் உள்ள பகுதிகளிலும் திருமணங்களையும் நடத்தலாம்.

விருந்தினர்களின் எண்ணிக்கை மண்டபத்தின் இருக்கை திறனில் 50 வீதத்தை விட அதிகமாக இருக்கக் கூடாது. கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்து அதிகபட்சம் 200 விருந்தினர்கள்வரை அனுமதிக்க முடியும்.

எச்சரிக்கை நிலை 3 இன் கீழ் உள்ள பகுதிகளில் திருமணங்களை அதிகபட்சம் 50 விருந்தினர்களுடன் நடக்கலாம். எச்சரிக்கை 4 இன் அடிப்படையில், திருமணங்கள் அதிகபட்சம் 20 விருந்தினர்களுடன் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய நடத்தப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஊரடங்கு உத்தரவு விதிக்கப்படாத பகுதிகளில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் வழிகாட்டுதல்களை வெளியிட்டிருந்தது. இன்று வெளியிப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் முழு நாட்டுக்கும் பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கூட்டுக் கடற்பயிற்சியாலேயே கரையொதுங்கின திமிங்கலங்கள்

கொழும்பு, நவ. 6

இந்தியப் பெருங்கடலில் பல நாடுகள் நடத்திய கூட்டு கடற்படைப் பயிற்சியின் காரணமாகவே திமிங்கலங்கள் கரையொதுங்கின எனவும் தெரியவந்துள்ளது.

பாணந்துறை கடற்கரையில் நூற்றுக்கணக்கான திமிங்கலங்கள் கடந்த 2ஆம் திகதி கரையொதுங்கியமை பெரும் கேள்விகளை எழுப்பியிருந்தது. இதற்கான காரணத்தை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நடத்திய 'மலபார்' என்ற கடற்படை பயிற்சியால் திமிங்கலங்கள் சிக்கித் தவித்தன எனவும் இதன் காரணமாகவே அவை கரையொதுங்கின எனவும் சுற்றுச்சூழல் ஆர்வலர் நயனக ரன்வெல்ல தெரிவித்தார். (ஒ,இ)

## குருதிக்கு தட்டுப்பாடு

### கொடையாளர்களை முன்வருமாறு கோரிக்கை

கொழும்பு, நவ.6

இலங்கையின் பிரதான குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலமாகவே குருதித் தான நிகழ்வுகளை நடத்துவதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்பட்டதனால் குருதி வங்கியில் போதியளவு கையிருப்பு கிடையாது என குருதி வங்கியின் பணிப்பாளர் டொக்டர் லக்ஸ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார். ஊரடங்குச் சட்டம் காரணமாக குருதித் தானம் செய்ய வரும் கொடையாளர்களுக்கு வருகை தர முடியாதுள்ளது. குருதிக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு கொடையாளர்கள் குருதித் தானம் செய்ய முன்வர வேண்டும் என்று அவர் மக்களிடம் கோரியுள்ளார். (ப-இ)



## பல்கலை மாணவர்களுக்கு லப்ரொப்

### அரசு திட்டம்

கொழும்பு, நவ.6

இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள 41ஆயிரம் மாணவர்களுக்கு கடன் அடிப்படையில் மடிக்கணனிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதிகபட்சமாக ஒரு லட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்பட உள்ளது. இதனூடாக மடிக்கணனியைக் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் பட்டம் பெற்றுக்கொள்ளும் வரையில் மடிக்கணனிக்கான கடன் தொகையைச் செலுத்தத் தேவையில்லை எனவும் கற்கும் காலத்தில் மாதாந்த வட்டித் தொகையை மட்டுமே செலுத்த நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான ஓர் நிறுவனத்தில் மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ப)

## இடம்பெயர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதில் தொடர்ச்சியாக பல தடைகள்

### மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

வவுனியா, நவ. 6

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த பல குடும்பங்களுக்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளோம் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இடர்கொடுப்பனவை நான் வழங்க எத்தணித்த ஒவ்வொரு தடவையும் பல்வேறு சிக்கல்களையும் தடைகளையும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

இந்தக் கொடுப்பனவை வழங்கி விடக்கூடாது இதனைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதற்காக பல தடைகளைப் போட்டு தாமதமாக்கியவர்கள் எம்மீது விமர்சனங்களையும் அள்ளி வீசினர். இருப்பினும் எனது மக்கள் சேவையை இவர்களால் ஒருபோதும் தடுத்து நிறுத்தி விடமுடியாது - என்றார். (ம-இ)

## சட்டத்தரணி ஹிஜாஸை விடுவிக்க சர்வதேச அழுத்தம்

கொழும்பு, நவ. 6

மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடனடியாக விடுதலை செய்வதன் ஊடாக சட்டத்தின் ஆட்சியையும் சர்வதேச சட்ட வரையறைகளுக்குக் கட்டுப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். அதேவேளை, இலங்கையிலுள்ள சட்டத்தரணிகள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி தமது தொழிலை முன்னெடுப்பதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸிற்கான மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குழு வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தடுப்பு உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் அவரைக் கைதுசெய்தமைக்கான காரணங்கள் எவையும் அவரது குடும்பத்தினருக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை.

சுமார் 6 மாதங்களுக்கும் அதிகமான காலம் எவ்வித விசாரணைகளுமின்றி, நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் முறையான சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்.

அவரைத் தடுத்துவைப்பதற்கான உத்தரவு ஒக்ரோபர் 14 ஆம் திகதி மீளப்புதுப்பிக்கப்பட்டதுடன் கடந்த மாதம் 28 ஆம் திகதி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த அவரது வழக்கு, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பிற்போடப்பட்டிருக்கிறது.

அத்துடன் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம், என்றுள்ளது. (ஒ,இ)

# லங்கா பிறிமியருக்கு அரசு பச்சைக்கொடி

கொழும்பு, நவ.6

இலங்கையில் கொரோனாப் பரவல் காரணமாக லங்கா பிறிமியர் லீக் தொடர் நடைபெறுமா எனச் சந்தேகம் நிலவிய நிலையில், தொடரை நடத்துவதற்கு அரசு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.




ஜனாதிபதி மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளுடனான கலந்துரையாடலுக்குப் பின்னர் இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. ஆயினும் முன்னர் நிர்ண யிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு நாள்கள் தள்ளிவைக்கப்பட்டு, எதிர் வரும் 27 ஆம் திகதியே இந்தத் தொடர் ஆரம்பிக்கப்ப டவுள்ளது. இதனால், 'பாகிஸ் தான் சூப்பர் லீக்'கில் விளை யாடும் வீரர்கள் சிலர் லங்கா பிறிமியர் லீக்கில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற)



## காலிறுதியில் வாவ்ரிங்கா

பரிஸ், நவ.6

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென் னிஸ் தொடரின் மூன்றாவது சுற்று ஆட்ட மொன்றில் வெற்றிபெற்ற சுவிஸ்லாந்தின் ஸ்டென் வாவ்ரிங்கா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்த ஆட்டத்தில் சுவிஸ் லாந்தின் ஸ்டென் வாவ் ரிங்கா, ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வ்வுடன் மோதினார்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், 16, 64, 63 என்ற நேர் செற் கணக் கில் வெற்றிபெற்று ஸ்டென் வாவ்ரிங்கா, காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நாளை நடைபெறும் காலிறுதிப் போட்டியில், ஸ்டென் வாவ்ரிங்கா, ஜேர்மனியின் இளம் வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வை எதிர்கொள் ளவுள்ளார். (ற)

## ரபேல் 1000

பரிஸ், நவ.6

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் தொடரில் ரபேல் நடால் (ஸ்பெயின்), பெலிசியானோ லோபஸை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றியுடன் நடால் சர்வதேச ரென்னிஸ் அரங்கில் ஆயிரம் வெற்றிகளை ருசித்துள்ளார்.

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் தொடர் பிரான்சில் நடைபெற்று வருகிறது.

அண்மையில் பிரான்ஸ் பகிரங்க பட்டத்தைக் கைப் பற்றிய உலகின் 2 ஆம் நிலை வீரரான நடால், நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் சக நாட்டு வீரர் லோபஸை எதிர்த்து போட்டியிட்டார்.

இந்த ஆட்டத்தில் நடால் 46, 76 (75), 64 என்ற செற் கணக்கில் சக நாட்டவரான பெலிசியானோ லோபஸை போராடி வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

2002 ஆம் ஆண்டில் முதலாவது வெற்றியைப் பெற்ற நடால் 18 ஆண்டுகளில் ஆயிரம் வெற்றிகள் என்ற மைல்கல்லை எட்டியிருக்கிறார். இதுவரை ஆயிரத்து 201 ஆட்டங்களில் ஆடியுள்ள நடால் அதில் 86 பட்டங்களுடன் ஆயிரம் வெற்றிகளையும், 201 தோல்விகளையும் கண்டுள்ளார்.(ற)






## நியூஸிக்கு இனி 'ரொஞ்சி'

நியூஸிலாந்து, நவ.6

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளரான லூக் ரொஞ்சி, நியூஸி லாந்து அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் துடுப்பாட்ட பயிற்சியாளராக இருந்த பீட்டர் ஃபுல்டனுக்கு பதிலாகவே லூக் ரொஞ்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

39 வயதான ரொஞ்சி, 4 டெஸ்ட், 85 ஒருநாள் மற்றும் 33 ரி 20 போட்டிகளில் விளையாடி யுள்ளார். இவர் தலைமைப் பயிற்சியாளர் கேரி ஸ்டீட் மற்றும் பந்துவீச்சுப் பயிற்சியாளர் ஷேன் ஜூர்கென்சன் ஆகியோருடன் இணைந்து பணி யாற்றவுள்ளார். (ற)



## வெலோசிட்டியை வீழ்த்தி டிரைல்பிளாசர்ஸ் வாகை!

புதுடில்லி, நவ.6

பெண்கள் சலஞ்ச் ரி20 கிரிக்கெட் ஆட்டத்திர் டிரைல்பிளாசர்ஸ் அணி 49 ஓட்டங்கள் எடுத்து 9 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. வெலோசிட்டி அணி 47 ஓட்டங்களில் சுருண்டது.

இந்திய கிரிக்கெட் சபை சார்பில் 3 ஆவது பெண்கள் சலஞ்ச் ரி20 கிரிக்கெட் தொடர் சார்ஜாவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நடப்பு சம்பியன் சூப்பர் நோவாஸ், வெலோசிட்டி, டிரைல்பிளாசர்ஸ் ஆகிய 3 அணிகள் இந்தத் தொட ரில் பங்கேற்கின்றன.

ஆட்ட முடிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். முதலாவது லீக் ஆட்டத்தில் வெலோசிட்டி அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் சூப்பர் நோவாஸை வீழ்த்தியது. நேற்று மாலை நடந்த 2 ஆவது லீக் ஆட்டத்தில் வெலோசிட்டி டிரைல்பிளாசர்ஸ் அணிகள் மோதின.

அதில் நாணயச்சுழற்ச்சியில் வென்ற வெலோசிட்டி அணித் தலைவி மிதாலிராஜ் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய வெலோசிட்டி அணி 15.1 பந்துப் பரிமாற்றங்களில் வெறும் 47 ஓட்டங்களுடன் சுருண்டது.

டிரைல்பிளாசர்ஸ் அணி 7.5 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கு இழப்புக்கு 49 ஓட்டங்கள் எடுத்து 9 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

டிரைல்பிளாசர்ஸ் வீராங்கனை சோபி எக்லெஸ் டோன் ஆட்டநாயகி விருது பெற்றார். 3 ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டம் நாளை நடைபெற வுள்ளது. (ற)

# ‘சில்’ டொனால்ட் ‘சில்’!

## தோல்வியின் விளிம்பில் நிற்கும் ட்ரம்புக்கு சமூக செயற்பாட்டாளர் கிரைட்டா பதிலடி!




வொஷிங்டன், நவ. 6

டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார் சுவீடனைச் சேர்ந்த காலநிலை மாற்ற செயற்பட்டாளர் கிரைட்டா தன்பேர்க்.

வாக்குகள் எண்ணுவதை நிறுத்துங்கள் என ட்ரம்ப் பதிவிட்ட ருவிட்டர் பதிவுக்கு பதிலடியாகவே அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது, இது மிகவும் அபத்தனமானது. டொனால்ட் தனது கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். கோபத்தைக் குறையுங்கள் டொனால்ட், கோபத்தை குறையுங்கள். நண்பருடன் பழைய பாணியிலான திரைப்பட மொன்றுக்குச் செல்லுங்கள் என தன்பேர்க் தெரிவித்துள்ளார்.

தன்பேர்க் ஒரு பதின்ம வயதுச் சிறுமி. காலநிலை மாற்றத்துக்கு எதிராக அவர் செயற்பட்டு வருகின்றார். புவி வெப்பமாவதைத் தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தன்பேர்க் வலியுறுத்தி வருகின்றார். உலக மெங்கும் தன்பேர்க்குக்கு ஆதரவாளர்கள் உள்ளனர். தன்பேர்கின் முயற்சிகளுக்கு ட்ரம்ப் பெரும் முட்டுக்கட்டை போட்டார். தன்பேர்க்கை கடுமையாக விமர்சித்தார். உலகம் வெப்பமாதலைத் தடுக்கும் பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றினார். இதற்கெல்லாம் பதிலடியாகவே கிரைட்டா தற்போது கருத்துத் தெரிவித்துள்ளார் என்று கருதப்படுகின்றது.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து பைடன் வெற்றிபெற்றால் அமெரிக்கா பரிஸ் ஒப்பந்தத்தில் இணையும் என்பது கிரைட்டாவின் எதிர்பார்ப்பாகும். (வ-இ)



## கல்வான் முறுகல் நிலை இந்தியா – சீனா பேச்சு!

புதுடில்லி, நவ. 6

கல்வான் பள்ளத்தாக்கு முறுகல் நிலையைத் தொடர்ந்து இந்தியா - சீனா இடையே 8ஆவது சுற்றுப் பேச்சு கிழக்கு லடாக்கில் இன்று ஆரம்பித்துள்ளது.

இந்தியா - சீனா இடையிலான எல்லைப்பிரச்சினை முன்னெப்போதும் இல்லாத வகையில் தீவிரமடைந்துள்ளது. கல்வான் பள்ளத்தாக்கு மோதலைத் தொடர்ந்து எல்லையில் இரு நாடுகளின் படைகளும் குவிக்கப்பட்டதால் அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது. படைகளைக் குறைத்து பதற்றத்தைத் தணிக்கவும், எல்லையில் முன்பு இருந்த நிலைமையை பராமரிப்பது தொடர்பாகவும் படைப்பிரிவு கட்டளை அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ந்து பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 7 சுற்றுகள் பேச்சு நடத்தப்பட்டும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. இதனையடுத்து, 8ஆம் சுற்று பேச்சு கிழக்கு லடாக்கில் இன்று தொடங்கியுள்ளது. (வ-ரி4)

## ட்ரம்பின் நேர்காணலை நிறுத்திய ஊடகங்கள்



வொஷிங்டன், நவ. 6

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் தொடர்பான நேர்காணலின் நேரடி ஒளிபரப்பை ஊடகங்கள் இடை நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேர்காணலின் போது ஜனநாயக கட்சியினர் வாக்குகளை எங்களிடம் இருந்து சட்டவிரோதமாக திருட முயற்சிக்கின்றனர் என ட்ரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். சுமார் 17 நிமிடங்கள் தொடர்ந்து பேசிய ட்ரம்ப்பின் நேரடி நேர்காணலை அமெரிக்க ஊடகங்கள் திடீரென நிறுத்தி விட்டன எனக் கூறப்படுகிறது. ட்ரம்ப் தவறான தகவல்களை பரப்பினார் எனவும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார் எனவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (வஇ)

## சண்டித்தனம் செய்தவர்...

கருதப்படும் ஐந்து பேர் பொதுச் சுகாதாரப் பரிசோகரால் ஒரிடத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். நேற்று இரவு அந்த வளாகத்துக்குள் சென்று, தனிமைப்படுத்தலில் உள்ள ஒருவரைத் தாக்க முயன்றுள்ளார். கற்களையும் வீசியுள்ளார். சம்பவத்தை அறிந்து பொலிஸார் வந்தபோது, அந்த நபர் தப்பியோடியுள்ளார். இந்தச் சம்பவத்தை தனிமைப்படுத்தலில் உள்ள இன்னொருவர் கைபேசியில் பதிவு செய்துள்ளார். அதை அந்தப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அனுப்பியுள்ளார்.

காணொலியின் அடிப்படையில் தாக்குதல் நடத்தியவர் இனங்காணப்பட்டார். அதையடுத்து அந்த நபர் குடும்பத்தோடு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை பொதுமக்களுக்கு உரியது. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (எ-9)



## மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற ஜசிந்தா

வெலிங்டன், நவ. 6

நியூசிலாந்தின் பிரதமராக ஜசிந்தா ஆர்டென் 2ஆவது முறையாக பதவியேற்றுக் கொண்டார்.

ஒக்ரோபர் 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ஜசிந்தா ஆர்டெனின் தொழிலாளர் கட்சி, மொத்தம் உள்ள 120 இடங்களில் 65 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றிபெற்றது.

இதனையடுத்து வெலிங்டனில் இன்று நடைபெற்ற விழாவில், நாட்டின் பிரதமராக தொடர்ந்து 2ஆவது முறையாக ஜெசிந்தா ஆர்டென் பதவியேற்றுக்கொண்டார். (வ-இ)

## அல்வாய்...

இவர்கள் தொடர்பான விவரங்கள் தெரிந்தவர்கள் அல்லது இவர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள் வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பிற்குரிய 021 222 6666 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு விவரங்களை அறியத்தரவும். இவ்விபரங்கள் தொடர்பான இரகசியத்தன்மை இறுக்கமாகப் பேணப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ,இ)

## 20 நிமிடங்களில்...

றாளர்களை இனங்கண்டுகொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சின் இரசாயனகூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பால் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு லட்சம் வைரஸ் பரிசோதனைக் கட்டமைப்புக்கள் கொரியாவில் இருந்து தருவிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். 20 நிமிடங்களில் தொற்றைக் கண்டறியக் கூடிய 8 லட்சம் கருவிகளை அடுத்த வாரம் நாட்டுக்குக் கொண்டுவர அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 06.11.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.